பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 19 சனிக்கிழமை (04-08-2001) தொலைபேசி: 3378 ஒலி: 236

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ்நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127)

## ● சந்திரிகா - வாஜ்பாய் அரசுகளிடையே முறுகல்

# இலங்கைக்கான ஆயுத விற்பனை

# இந்தியா நிறுத்திக்கொண்டது!

### இந்துப் பத்திரிகை தகவல்

(புதுடில்லி)

இலங்கைக்கு வருங்காலத்தில் யுத்தக் கப்பல்களையோ மற்றும் யுத்த தளபாடங்களையோ விற்பனை செய்வதில்லை என்று புதுடில்லி தீர்மானித்திருப்பதாகவும், இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அரசுக்கு உதவுவது தொடர்பாகவும் தனது பழைய நிலைப்பாட்டை இந்தியா மாற்றிக் கொண்டுள்ளதாகவும் "இந்துப்பத்திரிகை" செய்தி வெளியிட்டுள்ளது.

கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தின்மீதும், கட்டுநாயக்கா சர்வதேசவிமான நிலையத்மீதும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தைஅடுத்தும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர் இந்தியஅரசைக் கண்டித்ததை அடுத்து இலங்கை அரசு மீதான நிலைப்பாட்டை இந்தியா மாற்றிக்கொண்டுள்ளதாகப் புதுடில்லிவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அரசுமீது புதுடில்லி தற்பொழுது கொண்டுள்ள நிலைப்பாடு தொடர்பாக இந்துப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவின் அரசின்மீது இந்தியாகடும் போக்கை கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளது

விமானப் படைத்தளத்திலும், சர்வதேசவிமானநிலையத்திலும் புலிகள் சமீபத்தில் மேற்கொண்ட தாக்குதல் குறித்து இந்தியாதனது கவலைமட்டுமே தெரிவித்திருந்தது

(8ஆம் பக்கம் பார்க்க)

### தேசிய நல்லிணக்கஅரசை அமைக்கரணில்இணக்கம்?

சர்வஜனவாக்கெடுப்பிற்கு முன்பதாகதேசியநல்லிணக்க அரசொன்றை நிறுவுவதற்கு எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொள்கையளவில் இணங்கியிருப்பதாக சிஹல உறுமயக்கட்சியின் செயலாளர் திலக்கருணாரத்தின தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவரின் இணக்கத்தைத் தொடர்ந்து தேசிய நல்லிணக்க அரசின் இறுதிவடிவத்தைக் கொடுக்க வேண்டிய நிலைஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ

### விமான தளபாதுகாப்பிற்கு ஆலோசனைக் குழு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலைய விமானப்படைத்தளத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்வகையில் அதன் பாதுகாப்புக் குறித்து ஆலோசனை வழங்கவென, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் ஆலோசனைக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை உருவாக்கப்பட்ட இவ் ஆலோசனைக்குழுவின் தலைவராக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டீ சில்வா நியமிக்கப்பட்டுள்

[8 ஆம் பக்கம் பார்க்க]

### வடக்கு,கிழக்கில் செய்தி சேகரிக்க மீண்டும் தடை!

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு செய்தியாளர் சென்று செய்திகள் தகவல்கள் சேகரிப்பதற்கு நேற்று முதல் மீண்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

செய்தியாளர்கள் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு செல்வதற்கு புதிய நடைமுறையின்படி பாதுகாப்பு அமைச்சு மற்றும் தகவல்த் திணைக்களம் ஆகியவற்றின் அனுமதி பெற்றே செல்ல வேண்டுமென்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளைவடக்குகிழக்கு செய்தியாளர்களசெல்வதற்கு அண்மையிலேயேதடை நீக்கப்பட்டிருந்ததென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### அமைச்சர் குழுவிடம் இ. தொ. க. சந்திப்பு

[கொழும்பு]

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தூதுக்குழுவினர் சர்வஜன வாக்கெடுப்புத் தொடர்பாக தொழில் அமைச்சர் அலவி மௌலானா தலைமையிலான அமைச்சர் குழுவைச் சந்தித்துப்பேசியுள்ளனர்.

அமைச்சர்களான அலவி மௌலானா, அத்தாவுட செனிவிரத்தின பட்டிவீரக்கோன் ஆகியோர் அமைச்சர் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

இடபேச்சின்போது அரசியல் சீர்திருத்தத்தின் மூலம நடைமுறைப்படுத்தவுள்ள தேர்தல் முறைகளினால் இந்தியவம்சா

(8 ஆம் பக்கம் பார்க்க

### கொழும்புத்துறைமுகத்தை தாக்க புலிகள் திட்டமிட்டுள்ளனர்

#### புலனாய்வுப்பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகள கொழும்புத்துறைமுகத்தை தாக்கி அழிப்பதற்குத் திட்டமிட்டுள்ளனரென்று, இராணுவ புலனாய்வு பிரிவு படைத்தரப்பை எச்சரித்துள்ளது.

இதனையடுத்து கொழும்பு துறைமுகப் பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது

துறைமுகவீதிகள், வெளிச்சவீடுகள,கடற்பகுதிகள்மற்றும் முக்கிய நிலையங்களில் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், கடற்படையினரும் மேலதிகமாக இப்பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

துறைமுகத்தை அண்டிய கடற்பகுதிகளில் கடற்படையினரின் ரோந்துச் சேவைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

துறைமுக பாதுகாப்பு ஊழியர்களின் லீவுகள் ரத்துச்செய்யப்பட்டு அவர்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளும் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்கா விமானப்படைத்தள தாக்குதலையடுத்து கிலி கொண்டுள்ள படைத்தரப்பு துறைமுகத்தை விடுதலைப்புலிகள் தாக்கலாமென்ற அச்சத்தில், பாதுகாப்பில் உசாரடைந்துள்ளது.

இதேவேளை துறைமுகபாதுகாப்புப் பகுதிகளுள் சென்ற

(8ம்பக்கம் பார்க்க)

### விடுதலைப்புலிகளின் சடலங்களை ஒப்படைக்க நீதிமன்றம்தடை உத்தரவு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளத் தாக்குதலின் போது உயிரிழந்தவிடுதலைப் புலிகளின் சடலங்களை நீதிமன்ற உத்தரவின்றி எவரிடமும ஒப்படைக்க வேண்டாம் என நீர்கொழும்புநீதவான் நீதிமன்றநீதிபதி எம் என் புரண்ராகம வைத்தியசாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்

கட்டுநாயக்கா விமானத்

[8 ஆம் பக்கம் பார்க்க)

### 5 நிபந்தனைகளின் கீழ் அரசுக்கு ஆதரவுவழங்க ஜே.வி.பி இணக்கம்!

#### மல்வத்த பீடாதிபதியிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

★சர்வஜன வாக்கெடுப்பை ஒத்திவைத்தல் ★ பாராளுமன்றத்தைக் கூட்டுதல் ★ஐந தாணைக்குழுக்கள அமைத்தல் ★ஊழல, வீண்விரயம் என்பன வற்றைத் தடுத்தல் ★ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்தல் ஆகிய ஐந்து நிபந்தனையின் அடிப்படையில் பொதுஜனஐக்கிய முன்னணி அரசிற்கு ஆதரவு வழங்கப் போவதாக ஜே.வி.பியின் பிரச்சாரச்செயலா விமல்வீரவன்ச அறிவித் துள்ளார்.

மேற்கண்ட நிபந்தனையின் கீழ் அரசிற்கு ஆதரவு வழங்க விருக்கும் செய்தியை ஜே.வி.பியினர் கண்டி மல்வத்தை பீடாதிபதி ரம்புக்க விலக்கி தேரரைச் சந்தித்து தெரிவித்துள்ளனர்.

ஐந்து நிபந்தனைகளுக்கும் அரசு இணங்கி வருமானால் குறித்த ஒருவருடத்திற்கு அரசுக்கு ஆதரவு வழங்குவோம் என்றும மல்வத்த பீடாதிபதியிடம ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

#### சயனைட் உட்கொண்டதாகக் கூறி

### இளைஞனின் சடலம் பொலிஸாரால் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் சந்தேகத்திற்கு இடமாக நடமாடிய இளைஞர் ஒருவரை இராணுவத்தினர் கைது செய்து யாழ் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்த வேளை அவர் சயனைற் உட்கொண்டு தற்கொலைசெய்து கொண்டார். பிரஸ்தாப நபரின் சடலம்நேற்று முன்ப

[8 ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தலதா மாளிகைக்கு மின்னணு கருவிகள் வாங்க 05 மில்லியன் ஒதுக்கீடு

## பாதுகாப்பு காரணமாம்

(கொழும்பு)

பொதிகளை நுணுக்கமாக ஆராய்ந்து ஆபத்தான பொருட்களை கண்டுபிடிக்கும் மின்னணுவியல் சாதனங்கள் கொள்வனவிற்கென ரூபா ஐந்துமில்லியன் பணம் தலதா மாளிகைக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

இக் கருவியால் பொதிகள் பைகள், உட்படபக்தர்களால் எடுத்துச் செல்லப்படும் பொருட்களை பக்தர்களுக்கு இடைஞ்சல் ஏற்படாவண்ணம் பரிசோதிக்கமுடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்காவில் விமானப் படையினரின் தளம்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதையடுத்து கேந்திர நிலையங்கள் மீது பாதுகாப்பு வழங்கும் முகமாகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஆகஸ்ட் மாதம் 01ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதிவழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

தொடர்ச்சி

பருத்தித்துறை

| | |
|---|---|
| 177951 ஏ | 190109 ஏ |
| 190109 பி | 190109 சி |
| 190109 டி | 190109 ஈ |
| 194733 ஏ | 194733 பி |
| 196464 ஏ | 196464 பி |
| 196464 சி | 196464 டி |
| 196806 ஏ | 196834 ஏ |
| 196838 ஏ | 198252 ஏ |
| 198252 பி | 198362 ஏ |
| 198392 பி | 198362 சி |
| 198449 ஏ | 198485 ஏ |
| 198486 ஏ | 198511 ஏ |
| 200764 ஏ | 200764 பி |
| 200802 ஏ | 200803 ஏ |
| 200898 ஏ | 200900 ஏ |
| 200900 பி | 200988 ஏ |
| 200925 ஏ | 200995 பி |
| 200995 சி | 201015 ஏ |
| 201017 ஏ | 201077 ஏ |
| 201086 பி | 201086 பி |
| 201086 சி | 201086 டி |
| 201086 ஈ | 201108 ஏ |
| 201109 பி | 201117 ஏ |
| 201117 பி | 201150 ஏ |
| 202804 ஏ | 202804 பி |

| | |
|---|---|
| 202804 சி | 202804 டி |
| 202838 ஏ | 202852 ஏ |
| 202851 பி | 202851 சி |
| 202851 சி | 202851 ஈ |
| 202853 ஏ | 202874 ஏ |
| 202878 ஏ | 202878 பி |
| 202894 ஏ | 2 2894 பி |
| 202914 ஏ | 202914 பி |
| 202914 சி | 202914 டி |
| 202914 ஈ | 202933 ஏ |
| 202934 பி | 202957 ஏ |
| 202959 ஏ | 202003 ஏ |
| 202007 பி | 202007 சி |
| 203012 ஏ | 203012 பி |
| 203012 சி | 203013 ஏ |
| 203016 பி | 203016 ஏ |
| 203018 ஏ | 203018 பி |
| 203023 ஏ | 203023 ஏ |
| 203050 ஏ | 203052 ஏ |
| 203253 ஏ | 203056 ஏ |
| 203056 பி | 203062 ஏ |
| 203067 பி | 203077 ஏ |
| 203084 ஏ | 203088 ஏ |
| 203089 ஏ | 203090 ஏ |
| 203090 பி | 203097 ஏ |
| 203097 பி | 203067 சி |
| 203097 டி | 103097 ஈ |
| 203097எப் | 203106 ஏ |
| 203112 ஏ | 203112 பி |
| 203112 சி | 203125 ஏ |
| 203127 ஏ | 203127 ஏ |
| 203127 சி | 203141 ஏ |

நாளை தொடரும்


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

மீன்பிடியியல் டிப்ளோமா

நுண்கலைமாணி

(இசை/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்)

சற்கை நெறிகளின் புதிய அனுமதிகளுக்கான பரீட்சைகள்

1. மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான நேர்முகப்பரீட்சை 23-08-2001 அன்று காலை 9 30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மட்டும் நடைபெறும்.
2. நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) கற்கை நெறிக்கான தெரிவுப் பரீட்சை 08-09-2001 சனிக்கிழமையன்று காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், ஏனைய மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு வவுனியா வளாகத்திலும் நடைபெறும்.
3. நுண்கலைமாணி (இசை/நடனம்) கற்கை நெறிகளுக்கான செயன்முறை/நேர்முகப் பரீட்சைகள்
   இசை:-10-09-2001ல் இருந்து 14-09-2001 வரையும்
   நடனம்:-17-09-2001ல் இருந்து 21-09-2001 வரையும்
   காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மட்டும் நடைபெறும்.

- எல்லாக் கற்கை நெறிகளுக்குமான பரீட்சை அனுமதி அட்டைகள் தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

(02. 08. 2001) பதிவாளர்

(C- 2359)


# நிவாரணம் பெறுவோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப் பள்ளியிலிருந்து இடம் பெயர்ந்து வலிகாமத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர்பிரிவில் வசிப்போருக்கான இநமாதநிவாரண அனுமதிப்பத்திரம் எதிர்வரும திங்கட்கிழமை 6ம்திகதி யாழ்ப்பாணத்தில் இயங்கும்பளைப் பிரதேச செயலக உபஅலுவலகத்திலும் செவ்வாய்க்கிழமை 7ம் திகதி வழமையான இடங்களிலும், வடமராட்சியில் வசிப்போருக்கு புதன்கிழமை 8ஆம்திகதி புலோலியில்இயங்கும பளைப் பிரதேச செயலக அலுவலகத்திலும் வியாழக்கிழமை 9ம் திகதி வழமையான இடங்களிலும் வைத்து வழங்கபபடுமென பளைப்பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி றிஅவித்துள்ளார் (உ)

# இளைஞர் சுட்டுக் கொலை

(வவுனியா)

மன்னார் பகுதியில் கடந்த புதன்கிழமை இரவு இளைஞர் ஒருவர் விடுதலைப புலிகளின் பிஸ்ரல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இதனையடுத்து மன்னாரின் பள்ளிமுனை, உப்புக்குளம், மூவீதி போன்ற பகுதிகள் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதாகவும் அங்குள்ளபலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும தெரிவிக்கப் படுகிறது. (4)

# நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பிரதேசசபை உதவியுடன் அப்பகுதிப் பொதுச்சுகாதாரப் பரிசோதகரினால் கட்டாக்காலிநாய்கள் ஒழிப்புப்பணி அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

வேலணை.வங்களாவடி, துறையூர் ஆகியபகுதிகளில் 20 இற்கும அதிகமானநாய்கள் இவ்வாறு அழிக்கப்பட்டன. (உ-75)

# தபால் பொதிகள் எடுத்துவருகை

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் காங்கேசன்துறை வந்தடைந்த சர்வதேச செஞ்சிலுவைச்சங்ககப்பலில் யாழ குடாநாடடிற்கான 413 தபால்பொதிகள் எடுத்துவரப்பட்டன.

அத்துடன் குடா நாட்டிலிருந்து சேகரிக்கப்பட்ட 55 தபால் பொதிகள் அனுப்பிவைக்கப்படடுள்ளன.

மேலும் வடபகுதிக்கான தபால் பொதிகள் எவையும் திருகோணமலையில் இல்லையெனவும் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-10-9)

## நூல்வெளியீடு

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நூல் வெளியீட்டுரையை பாரம்பரிய கலை மேம்பாட்டுக் கழக செயலாளர் செ. மெற்றாஸ்மயிலும், மதிப்பீட்டுரையை மூதறிஞர் சொக்கனும் நிகழ்த்தவுள்ளனர். [உ]

## திருத்தம்

02-08 2001 அன்று வலம்புரியில் 2ஆம் பக்கத்தில் வெளியான நல்லூர் பிரதேச சபையின் புலமைப் பரிசில் எனும் விளம்பரத்தில் 20-06 2001 எனவெளியான திகதியை 20-08-2001 எனத் திருத்தி வாசிக்கவும்.

# நகைக்கடை ஊழியர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

காலியில் நகைக்கடை ஒன்றில் வேலைசெய்துவந்த பாண்டிருப்பைச் சேர்ந்த இளைஞரை குற்றப்புலனாய்வு பொலிசார் கைது செய்துள்ளனர்.

விஸ்வலிங்கம் ஜெகன் (வயது18 என்பவரே கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

இதேவேளை களுத்துறையில் நகைக்கடை ஒன்றில் வேலைசெய்துவந்த நாகமணி இலங்கேஸ்வரன் (வயது31) என்பவரும் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (உ-5)

# மிகக்குறைந்த நேரம் மட்டுமே நீர் விநியோகம்

(துன்னாலை)

கரவெட்டி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குழாய் மூலம் நீர்வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் மிகக் குறுகியநேரம் மட்டுமே நீர்விநியோகம் இடம்பெற்று வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கரவெட்டி மேற்கு. கரவெட்டி கிழக்கு துன்னாலை ஆகிய பகுதிகளிலேயேகுறைந்தளவு நேரத்திற்கு நீர் விநியோகம் இடம்பெற்று வருவதாகவும் சம்பந்தப்பட்டோர் இது விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நீர்விநியோகத்திற்கு கட்டணம் அறவிடப்பட்டு வருகின்றபோதிலும் இவ்வாறான செயற்பாடுகள் வேதனையைத் தருவதாக அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்தனர். (க-41)

## பத்திரிகையாளருக்கு மற்றுமோர் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கத்தினால பத்திரிகையாளர்களுக்கானமற்றுமோர் பயிற்சிநெறி சுன்னாகத்தில் விரைவில ஆரம்பிக்கப்படுவதற்கான முன்முயற்சிகள் இடம்பெற்று வருவதாகதெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே பத்திரிகையாளர் பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்கள நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் கடந்த 2ந்திகதி வழங்கப்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே. (க-124)

# கலாசாரப் பேரவை அமைப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில கலாசாரப் பேரவை அமைப்பு கடந்த மாதம் பதில் பிரதேச செயலர் ப. செந்தில்நந்தனன் தலைமையில் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பேரவையின் தலைவராக பதில் பிரதேச செயலர் ப செநதில்நந்தனனும் செயலாளராக நல்லூர் பிரதேசசெயலக கலாசார உத்தியோகத்தர் மேரி யூலியாவும் பொருளாளராக நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். ரவீந்திரசர்மாவும் சபையினரால் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் இயல், இசை. நாடகத்துறைகளுக்கு பொறுப்பாக 13 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (உ-6)

# கடல்வள தொண்டர் நியமனம்

(புலோலி)

யாழ் மாவட்டத்தில் 500 இளைஞர் யுவதிகள் கடல்வளத் தொண்டர்களாக நியமனம் பெறவுள்ளனர். அவர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புப பணமாக 2000 ரூபா வழங்கப்படவுள்ளது.

தீவுப்பகுதி, வடமராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம், தென்மராட்சிப் பிரதேசங்களில் இவர்கள் நியமனம் பெறுவார்கள். மேற்படி நியமனத்திற்கு விண்ணப்பிக்க விரும்பும் இளைஞர், யுவதிகள் தத்தமது பகுதி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [க-52]

# விருது வழங்கி கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானத்தினரால் சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு மூதறிஞர் க. சொக்கலிங்கம் குகஸ்ரீ விருது வழங்கி பொன்னாடை போர்த்தி தங்கப்பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்படவுள்ளார்.

நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்விற்கு யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி அ சண்முகதாஸ் தலைமை தாங்குகின்றார்.

யாழ். மாவட்ட நீதிபதி பா. சுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்து கொளகிறார். (செ-104)

# மீன் பிடித் தடை நீக்கம்

(யாழ்ப்பாணம)

வடமராட்சி சககோட்டை மற்றும்சுப்பர்மடம உளளிட்ட கடற் பகுதிகளில படையினரால் மீன்பிடிப்பதற்கு கடந்த மாதம 25ந்திகதி முதல விதிக்கப்பட்டிருந்த தடை நேற்று முதல் நீக்கப்பட்டு மீனவாகள தொழிலில ஈடுபட அனுமதிக்கப்படடுள்ளனர்.

யாழ் மாவட்ட ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் கே வி குகேந்திரன் (ஜெகன்) 524 ஆவது இராணுவபபடையணியுடன் தொடர்பு கொண்டு மீன்பிடித்தடையை நீக்குமாறு கோரியதையடுத்து தடைநீக்கப்பட்டுள்ளது (இ-10)

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

ஸ்கந்தவரோதயா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் விளையாட்டு கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட் சுற்றுப் போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பி ப 4மணிக்கு ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில்நடைபெறவுள்ளது.

இப்போட்டியின் முதற் சுற்றில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் எதிர் அளவெட்டி கலைவாணி விளையாட்டுக் கழகமும் குப்பிளான் ஞானகலா விளையாட்டுக் கழகம் எதிர் மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (5-12)

## குடாநாட்டின் ஒருபகுதி யுத்த பூமியாக காணப்படுவது

# எமக்கு பெரும் வேதனையே

### சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் ஒரு பகுதி இன்னும் யுத்த பூமியாகவும் சுடுகாடாகவும் இருப்பது வேதனையைத் தருகின்றது. தென்மராட்சிப் பகுதி ஆலயங்கள் யாவும் சிதைந்து காணப்படுகிறது நல்ல நிலையில் உள்ள ஆலயங்கள் பலவும் பூட்டப்பட்டு காணப்படுவது வேதனையைத் தருகிறது.

தொடரும் யுத்தம், தமிழரின் அவலநிலை குறித்து ஜனாதிபதி சந்திரிகாவிடம் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தினர் நேரில் தெரிவித்தபோது மேற்கண்டவாறு வற்புறுத்தினர்.

கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவாச்சாரியார் சுவாமிகள் தலைமையில் சென்ற மேற்படி குழுவினர் ஜனாதிபதியிடம் மேலும் தெரிவிக்கையில்;

ஒரு நாட்டில் ஆலய வழிபாடுகள் சரிவர நடைபெறாவிடில், தெய்வங்களுக்கான பூஜைகள் முறைப்படி நடக்காவிட்டால் நாட்டு மக்களுக்கும் அரசுக்கும் தீமை நேரிடும் என்றும் வளம் குன்றும் என்றும் ஆகம நூல்கள் கூறுகின்றன.

மன்னாரிலுள்ள திருக்கேதீச்சரம் கீரிமலை, நகுலேச்சரம், மாவிட்டபுரம் முதலிய புராதனப் பெருமை வாய்ந்த அருள் மிகுந்த ஆலயங்கள் அமைந்துள்ள பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால் மக்கள் அங்கு சென்று வழிபாடுகள் நடத்த முடியாமல் உள்ளது. பொதுவாகவே குடாநாட்டில் ஆலய வழிபாடுகள் விழாக்கள் நடைபெறும் போது அங்கு போய் வருகின்ற குருமாரும் பக்தர்களும் போக்குவரத்துப் பாதையிலே அடிக்கடி ஆங்காங்கே நடைபெறும் இராணுவப்பரிசோதனைகள், தடைமுகாம்களில் பல்வேறு விருப்பத்தகாத அனுபவங்களைப் பெற வேண்டி உள்ளது.

எனவே, இத்தகைய அசம்பாவிதங்கள் நீங்கி யாவரும் இயல்பாகஎங்கும் சென்றுவரக் கூடியதாகவும், எல்லா ஆலயங்களிலும் வழிபாடுகள் சரிவர நிகழக் கூடியதாகவும் நல்ல அமைதி நிலையை உருவாக்கித்தர வேண்டும் என்பது பிரதான வேண்டுகோளாகும்.

ஆகவே, சகல நிறைவேற்று அதிகாரம் கொண்ட தாங்கள் கூடிய விரைவில் சகல தரப்பினரோடும் கலந்துரையாடி, இருபகுதியினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வினை ஏற்படுத்தி இந்த நாட்டில் நிலையான சாந்தி, சமாதானம் ஏற்படுத்துவீர்கள் எனக்கேட்டுக் கொள்கின்றோம் இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## இளைஞர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவடிவேம்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இராணுவத்தினரால் சித்தாண்டியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் வேலக்கொடி சந்தையா (வயது 18) என மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-5)

## இராசிபலன்

04-08-2001
[ஆடி 19, சனி]
பூரணை மு ப 11 25 வரை
திருவோணம் மு இ 10 32 வரை
இராகுகாலம் 9 04- 10 34
நல்லநேரம் 3 04- 4 34
சித்தம்.

**மேடம்**
கடின உழைப்பு, உற்சாகம், முயற்சி வெற்றி, சுபநிகழ்வு.

**இடபம்**
கட்டுப்படுதல், உடல் சோர்வு. புதிய முயற்சி களத்திர சுகம்.

**மிதுனம்**
வீண பிரச்சினை, முயற்சி தாமதம், மனப்பதட்டம், பிரயாண பயம்.

**கடகம்**
பிரயாணம், சிநேகிதர் சந்திப்பு, காரியம் கைகூடும், வரவேறபு.

**சிங்கம்**
பகைவரால் நன்மை, புதிய முயற்சி, சந்தோஷம், தேக நலம்.

**கன்னி**
மதிப்புக் குறைவு, காரிய தாமதம், தொழில சிறப்பு, உடல் சோர்வு.

**துலாம்**
மனச் சஞ்சலம், கல்வி மேன்மை, அற்பர் உறவு, காரிய தாமதம்.

**விருச்சிகம்**
கூட்டு முயற்சி, தனவரவு, முயற்சி பலிதம், நல்ல சமபவம்.

**தனுசு**
மாதர் நட்பு, விவாதம், முயற்சி தாமதம், பெரியோர் மனஸ்தாபம்.

**மகரம்**
ஜனவசியம், போசனசுகம், காரிய அனுகூலம், உடல் நலம்.

**கும்பம்**
வீண் அலைச்சல், சுபகாரியச் செலவு. பிரயாணம், உணர்ச்சி வசப்படல்.

**மீனம்**
தொழில் சிந்தை, மதிக்கப் படுதல், புகழ், காரியம் கைகூடும்.

(பழையநேரப்படி கணிப் பிடப்பட்டுள்ளது.)

-வளவன்

## சிங்கள திரைப்பட தயாரிப்பாளருக்கு அரசு நட்டஈடு வழங்கவேண்டும்

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு

[கொழும்பு]

யுத்தத்திற் கெதிரான கருத்துக்களைக் கொண்டமைந்த சிங்களத் திரைப்படத்திற்கு தடை விதித்தமைக்காக சம்பந்தப்பட்ட திரைப்படத் தயாரிப்பாளருக்கு அரசு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என இலங்கை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யுத்தத்தில பலியான இராணுவ வீரர் ஒருவரின் குடும்பத்தை மையமாக வைத்து போருக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டமைந்த 'பூரணை தினத்தில் மரணம்' என்றதிரைப்படத்தை வெளியிட கடந்த வருடம் அரசு தடை விதித்திருந்தது

இத்தடையை எதிர்த்து படத்தயாரிப்பாளர் வழக்குத் தொடுத்ததன் பேரில் மேற்படி தீர்ப்பை வழங்கிய உயர் நீதிமன்றம்,

திரைப் படத்திற்குத் தடை விதிப்பதற்கு அப்போதைய பிரதி அமைச்சர் சரத் அமுனுகமவிற்கு அதிகாரம் கிடையாது என்றும் குறிப்பிட்டுள்ளது. [உ-4]

## இடம்பெயர்ந்த மாணவர்க்கு இலவசசீருடை விநியோகம் மூன்றாம் தவணை

(மந்திகை)

தென்மராட்சிக்கல்வி வலய பாடசாலைகளில் கல்வி கற்று இடப்பெயர்வின் பின் யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான இலவச சீருடை அந்தந்த பாடசாலை அதிபர்கள் ஊடாக வழங்குவதற்கான நடவடிக்கை எடுத்துள்ளதாக வலய கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார்.

தற்போது பாடசாலைகள் விடுமுறை காலமாகையால் 3 ஆம் தவணை ஆரம்பத்தில் இவை விநியோகிக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-23)

## இரண்டாவது சுற்றுக்கு 6 பாடசாலைகள் தெரிவு

[சுண்டுக்குளி]

யாழ் மாவட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்ற 12 வயதுக்குக் கீழ்ப் பட்ட பிரிவு உதை பந்தாட்டப் போட்டியில் 2 வது சுற்றுக்கு யாழ் புனிதஜோசப் வித்தியாலயம், யாழ். ஆவரங்கால் நடராஜஇரமலிங்கவித்தியாலயம், யா- புனிதபத்திரிசியார் கல்லூரி, யா-சென்ஜோன்ஸ்கல்லூரி, ஊரெழுகணேச வித்தியாலயம், யா-புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயம் ஆகிய 6 பாடசாலைகள்தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் எதிர்வரும் 10ஆம் திகதிவெள்ளிக்கிழமை முதல் யா-மத்திய கல்லூரி மைதானேத்தில் லீக முறையில் நடைபெறவுள்ளது. (உ-110)

## நல்லூரான் திருவடிக்கு-11



### தந்தையே நல்லூரானே!

தந்தையே தாயேநற் றேனே யமுதமேயென்
சிந்தையுள் நிற்கும் உருவேயுன்-பந்தமே
வேண்டுவ தன்றியான் வேறொன்று வேண்டுவனோ
வீண்டிந்தப் பூமியின் மேல்

நா. நர்மதா
கொக்குவில்

### மனம் மகிழும் வேலவனே!

கந்தா கடம்பா கதிர் வேலா
உன்னைக் கண்டால் துயரில்லை
திருவே திருமுருகன் வேலே
தினம் உன்னைத் தரிசித்தால் தீதில்லை

அருளே அழகே வடிவேலே
வந்தேன் சரண் அடைந்தேன் அடைக்கலமே
மருகா மலரே மயில் வாகனனே
மனதால் துதித்தால் மனம் குளிருமே

வி. ஜெனா

### கனிமுகம் காட்டி கருணை புரி

செங்கதிர் வேலவா! நல்லைக் குமரனே!
அங்கையினில் வேலேந்தி வீதியுலா வருவாய்;
எங்களினத்தின் துயர் போக்க நீ வாராயோ?
மங்காத ஒளிவிளக்கே நல்லையூர் கந்தனே!
புனித முறு நல்லை நகர் மேவியருள் கந்தா!
புனித முறும் நின்னடியார் குறைகள் கேளாயோ
கனிமுகம் காட்டி கருணைபுரி வள்ளலே
இனிய நற்றமிழ் கொண்டு பாமாலை சூட்டிடுவோம்

யாழோன்

### நல்லூரே நமக்கு நல்லூர்!

நல்லை நகர்க்கோடி வாரும்—குகன்
நாட்டத்தி னால்வினை யாவையும் தீரும்
செல்வன் திருமுன்றில் சேரும்—சுகம்
சேர்ந்து சிறப்பதைச் சீர்தூக்கிப் பாரும்!

வேலன் புகழ்தனைப் பாடும்—பக்தி
மேலிடக் காவடி தூக்கிநின் றாடும்
காலன் தொலைவினில் ஓடும்—உங்கள்
காரியம் கண்முன்னே திண்ணங்கை கூடும்!

பன்னிரண் டுண்டுகண் பார்க்க—செவி
பன்னிரண் டுண்டடியர் சொல்குறை கேட்க
பன்னிரண் டுண்டுகை சேர்க்க—அருள்
பாலித் துடன்குறை யாவையும் தீர்க்க!

-குட்டித் தாத்தா

### முருகனைப் பாடுவோம்

நல்லை மயில் நாளும் ஆடும்
நாளும் முருகனை குயில் பாடும்
மல்லி முல்லை மாலை கட்டும்
மணி ஒலி வேல் காட்டும்

யோக நிலை நல்லையில் நிலைக்கும்
யாக மலை எல்லையில் முளைக்கும்
தாக அலை ஒளியில் குளிக்கும்
மோக வலை பழநியில் பறக்கும்

அகதிகள் வாழ்வு பனியிலும் பாடும்
அழகிய முருகன் ஒலியில் வாழும்
பூமியில் வாழும் தமிழர் முகங்கள்
புலரும் காலையில் புதினம் ஆளும்

புலேந்தி - திலீப்காந்த்

### ஆட்கொள்ளவேண்டுமடா

தொன் நகராம் நல்லையிலே வந்துதித்த பாலா
தொல்லைகளை நீக்க ஒரு சேதி சொல்லு நாதா
வன்முறையால் துன்பமுற்றோம் தேம்பிவிட்டோம் பாராய்
உன்வள்ளி தெய்வயானையுடன் எங்கு சென்றாய் வேலா
உன்வீதியிலே தந்துவைத்தாய் ஆசையற்ற தூயவரை
என் செந்தமிழ் துயர் கேட்டை பார்க்கவில்லை இற்றைவரை
நாதியற்ற நடைப்பிணமாய் வாழுகிறோம்தரணிவரை
சாதியற்ற தமிழினத்தை தந்துவிடு தமிழ் சாகும்வரை
காதல் மனம்கொள்ளுதடா கந்தா உன்னை எண்ணும் வரை
சாதலிலும் வேண்டுமடா முருகா என்னை மூட்டும் வரை
மோதலிலே வேகுதடா பாசத்தமிழ் விளைந்த இடம்
ஆதலினாலே எம்மையெல்லாம் ஆட்கொள்ள வேண்டுமடா

வட்டூர் வரதர்

## தீர்த்தத் திருவிழா

[புலோலி]

பருத்தித்துறை உபய கதிர்காம முருகன் ஆலய தீர்த்தத் திருவிழா இன்று நடைபெறுகின்றது. [செ-52]

★ ★ ★

(அரியாலை)

உடுப்பிட்டி வடக்கு நெற்கொழு வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத் தொடரில் இன்று தீர்த்தத் திருவிழாவும், திங்கட்கிழமை பூங்காவனத் திருவிழாவும், செவ்வாய்க்கிழமை திருக்குளிர்த்தியும் நடைபெறவுள்ளன. (செ-106)

## நல்லூரில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றத்தினரால் தினமும் மாலை 6.00 மணி தொடக்கம் 7.15 மணி வரை நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடத்தப்படும் தெய்வீக இசையரங்கில் இன்று, திருமதி ஞானகுமாரி சிவநேசனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறவுள்ளது. (செ)

## ஆடிவேல் இரதபவனி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ பாலகதிர்காம ஆலய ஆடிவேல் இரத பவனி எதிர் வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் கொண்டாடப்படவுள்ளது.

திங்கள் காலை 8.00 மணிக்கு இந்த ஊர்வலம் ஆரம்பமாகி வீரமாகாளி அம்மன் ஆலயம், யாழ்.நகர், வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலைச் சென்றடைந்து செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு வண்ணை நாச்சிமார் அம்மன் ஆலயம், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தைச் சென்றடைந்து புதன் காலை அங்கிருந்து புறப்பட்டு அரசடி சிவகாமசுந்தரி அம்மன் ஆலயம் ஆகிய இடங்களுக்குச் சென்று மாலை 5.00 மணிக்கு மீண்டும் ஆலயத்தை வந்தடையும். (செ-104)

## 62 வது ஆண்டு பூர்த்தி விழா

[மந்திகை]

இலங்கை வங்கியின் 62வது ஆண்டு பூர்த்திவிழா நிகழ்வு புதன்கிழமை நெல்லியடி இலங்கை வங்கியின் முகாமையாளர் ஆர். இராஜேந்திரா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். கதிரவேற்பிள்ளை, வடமராட்சி தென் மேற்கு பிரதேச செயலாளர் எஸ் ஸ்ரீநிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் 62 பேருக்கு புத்தகப்பையும் வாடிக்கையாளர் ஒருவருக்குத் துவிச்சக்கர வண்டியும் வழங்கப்பட்டது. (உ-23)

## படைப்பாளிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டம் மேற்கொண்டு வரும் வடமாகாண எழுத்தாளர்களின் நூல் கொள்வனவில் தமது நூலும் இடம்பெற விரும்பும் படைப்பாளிகளை நூலின் ஒவ்வொரு பிரதியுடன் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணிக்கு பிரௌன் தமிழ் எழுத்தாளர் மண்டபத்தில் தம்மை வந்து சந்திக்குமாறு அதன் தலைவர் செங்கை ஆழியான் அறிவித்துள்ளார். (உ)

# மக்களுக்கு ஏற்படுகின்ற இழப்புகளை தடுக்கவே ஈ.பி.டி.பி பாடுபடுகிறது

### பரிசளிப்பு விழாச் செய்தியில் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

நாங்கள் பதவிகளைப் பெற்றிருப்பது ஆடம்பரமான வாழ்வுக்காகவும், தலையில் ஒரு மலர்க்கிரீடம் சூடிக் கொள்வதற்காகவும் அல்ல.

அச்சுறுத்தல்களை எதிர்கொண்டபடி அரசியல் வாழ்வில் ஈடுபட்டிருப்பது இன்றைக்கு மக்கள் சந்தித்து நிற்கும் நிலைமைக்கு நாங்களும் ஏதோ ஒருவகையில் பொறுப்பு என்னும் தார்மீகக் கடமையின் பாற்பட்டதே.

யாழ்.மத்திய கல்லூரியின் 185 ஆவது பரிசளிப்பு விழாவிற்காக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான கே.என் டக்ளஸ்தேவானந்தா அனுப்பி வைத்த செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது.

சொந்த வாழ்வின் சுகங்களை மறுத்து பதவிச் சுமைகளைத் தூக்கியிருப்பது எமது மக்களின் வாழ்வை ஒளிமயமான எதிர்காலத்திற்கு இட்டுச் செல்ல வேண்டும் என்பதற்காகவே இக் காரணத்தினலேயே உங்கள் முன்னிலையில் நேரில் வந்து பங்கேற்க என்னால் இயலவில்லை.

கல்வித் துறையின் விருத்தி என்பது கட்டடங்களைக் கட்டி எழுப்புவது அல்ல பதவி உயர்வுகளைப் பெறுவதோ, விரும்பிய இடமாற்றங்களைப் பெறுவதோ அல்லமாறாக மாணவர்கள் மத்தியில் சரியானவற்றிற்காக துணிந்து நிற்கும் வீரத்தையும், சரியானவற்றைத் தெரிவு செய்து கொள்ளும் விவேகத்தையும் வளர்ப்பதற்கு துணை செய்வதாக இருக்க வேண்டும்.

சரியானது என்பது சமூகத்தின் பொது நலனுக்கு உகந்ததாக ஆக்க பூர்வமானதாக அமைய வேண்டும் (உ)

### கொழும்பில் பனைமரம் நடுவது

# தனி ஈழம் அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கை

### சிங்கள அமைப்புகள் போர்க்கொடி

[கொழும்பு]

கொழும்பு காலிமுகத்திடலில் பனைமரங்கள் நாட்டப்பட்டிருப்பதானது தனி ஈழம் அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கையே என பல சிங்கள அமைப்புகள் போர்க்கொடி தூக்கியுள்ளன.

பனைமரங்களை பிடுங்கி எறிந்துவிட்டு சிங்களவர்களின் பாரம்பரியங்களோடு இணைந்த தென்னை மரங்களை நாட்டுவதற்கும் அந்த அமைப்புகள் தீர்மானித்துள்ளனவாம்.

யாழ்ப்பாணத்தில் வளருவதும் தமிழ் மக்களின் பாரம்பரியங்களோடு இணைந்ததுமான பனைமரங்கள நாட்டப்படுவது கொழும்பில் சிங்களவர்களின் பாரம்பரியங்களை அழித்து விடும் எனவும் சிங்களவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் செயல் என்றும் அவை தெரிவித்துள்ளன.

நகரத்தை அழகுபடுத்துவதற்காக பனைமரங்களை நாட்டிய நகர அபிவிருத்தி அதிகார சபையினர் இச் சம்பவத்தால்குழம்பிப் போயுள்ளதாகவும்அறியப்படுகிறது. (உ-8-124)

# புத்தூர் கிராமத்தில் தையல் பயிற்சி நிலையம்

### 60பெண்கள் பயன்

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தும் நோக்கில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் புத்தூர் கிராமத்தில் தையல் பயிற்சி நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கென அப்பகுதியைச் சேர்ந்த 60 யுவதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் மூலம் வறுமைக்கோட்டின் கீழ் வாழும், கல்வியை இடையில் கைவிட்ட பெண்கள் பயன்பெற முடியும் எனவும்,

இவ்வாறானதோர் திட்டம் உரும்பிராய் பகுதியிலும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் வலி கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் பூ குணசிங்கம் தெரிவித்தார். (உ)

# அனலைதீவுபேருந்துசேவை புதன் முதல் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

அனலைதீவு மக்கள் போக்குவரத்து வசதியின்றி சிரமப்படுவதை தவிர்க்கும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாட்டில் அப்பகுதிக்கு பேருந்து சேவை கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுளளது.

இந்த பஸ் சேவையினை வைபவ ரீதியாக ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் என். மதனராஜா ஆரம்பித்து வைத்தார்.

இந்த வைபவத்தில் வடபிராந்திய போககுவரத்து சபையின் முகாமையாளர் மாணிககவாசகா ஈ.பி.டி.பி. யின் தீவக உதவிப் பொறுப்பாளர் காந்தன், ஈ.பி.டி.பி. யின் முக்கியஸ்தர் நெபலியன் மற்றும் பல பொதுமக்களும கலந்து சிறப்பித்தனர். [உ]

# பாரம்பரிய கலைகள் பயிலரங்கு ஆரம்பவைபவம்

### எதிர் வரும் வியாழனன்று

[யாழ்ப்பாணம்]

யாழ் திருமறைக்கலாமன்றம் நடத்தும் பாரம்பரிய கலைகள் பயிலரங்கின் ஆரம்ப வைபவம் எதிர் வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 4.00 மணிக்கு யாழ். பிறக்கா வீதியில் அமைந்துள்ள மன்றக் கிளை அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

இப் பயிலரங்கில் பங்கு கொள்ள விண்ணப்பித்த அனைவரையும் அன்றைய தினம் சமூகம் கொடுக்குமாறு திருமறைக் கலா மன்ற வட்டாரங்கள் அறிவித்துள்ளன [உ-59]

## காவலரண் மாற்றி அமைப்பு

(யாழ்ப்பாணம்)

கந்தர் மடப் பகுதியில் அரசடி வீதியும் பலாலி வீதியும் சந்திக்கும் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவக் காவலரன் தற்போது மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பொது மக்களின போக்கு வரதது இலகுவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-15)

# சிறுமி மீது பாலியல் வல்லுறவு குற்ற விசாரணையில் அதிபர்

(மலையகம)

மலையகப் பகுதியைச் சேர்ந்த தமிழ்ப் பாடசாலை ஒன்றின் அதிபர் அப் பாடசாலைச் சிறுமி ஒருத்தியை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்த முயன்றதாக மத்திய மாகாண தமிழ் கல்வி இந்து கலாசார அமைச்சர் வி. இராதா கிருஷ்ணனிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

இதனை அடுத்து அமைச்சின உயரதிகாரிகள் கொண்ட குழு ஒன்று விசாரணை நடத்து வருவதுடன் அதிபர் குற்றவாளியாக காணப்படுமிடத்து வேலை நீக்கம் செய்யப்படுவாரென அவ்வமைச்சின் பிரத்தியேக செயலாளர் ரீ. துரைசாமி தெரிவித்துள்ளார். [உ-05]

# மாணவன் கடலிற்துப் பலி உகந்தையில் சம்பவம்

(மட்டக்களப்பு)

கல்முனை உகந்தை கடலில கற்பாறை ஒன்றில் ஏறி நின்று புகைப்படம் எடுத்த மாணவன் கடல் அலையால் அள்ளுண்டு செல்லப்பட்டு உயிரிழந்த பரிதாபகர சம்பவம் அண்மையில் இடம் பெற்றது

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

கல்முனை பாத்திமா கல்லூரியில் உயர்தர வகுப்பில கல்வி கற்கும் ராஜரட்ணம் ராஜ்மோகன் என்பவர் தனது நண்பர்களுடன் உகந்தை முருகன் கோவிலிற்கு சென்ற சமயமே இவ் அனர்த்தம் இடம்பெற்றது.

இச்சம்பவமானது அப் பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது, (உ-4)

## மீள ஒப்படைக்க வில்லை

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் அரசடி வீதியில் உள்ள கலைமகள் வர்த்தக நிலையம் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த கடை உரிமையாளரின் எம். டி-90 ரக மோட்டார் சைக்கிளை கடந்த 26 ஆம் திகதி சீருடை தரித்த இருவர் திருப்பித் தருவதாக பெற்றுச் சென்றதாகவும்,

இற்றைவரை மோட்டார் சைக்கிள் கைக்கு வந்து சேரவில்லை எனவும் உரிமையாளரினால் இராணுவம் மற்றும் பொலிஸாரிடம முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது (உ-15)

## வீதித் தடையை மீறும் சாரதிகள்

[யாழ்ப்பாணம]

நல்லூர் கந்தசுவாமி கோவில உற்சவத்தையொட்டி அமைக்கப்பட்டுள்ள வீதித் தடைகளை பொருட்படுத்தாது, சிலர் வாகனங்களைத் தடை செய்யப்பட்ட பகுதிக்குள் செலுத்த முனைவதாக தெரியவந்துள்ளது.

சாரதிகள் சிலரின் இப் பொறுப்பற்ற செயலால் பக்தர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் ஆளாகி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-15)

## கசிப்பு உற்பத்தியாளர் கைது

[மந்திகை]

கைதடிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வந்த அறுவர் ஈ.பி.டி.பி. யினரால் கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் வசமிருந்த கசிப்பும் அழிக்கப்பட்டது.

நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தவர்களது விபரங்களை கைதடிப்பிரதேச ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் சாள்ஸ் அலக்சாண்டரிடம் பொது மக்கள் கொடுத்த முறைப்பாட்டையடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது உ23

## தொழிலாளி கைதென முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பெரிய பொக்கணை வாதரவத்தைப் பகுதியைச் சேர்ந்த கூலித் தொழிலாளியான சபாரத்தினம் முருகானந்தன் (வயது-39) என்ற குடும்பஸ்தரை, அவரது வீட்டில் வைத்து கடந்த புதனன்று பொலிஸார் கைதுசெய்துள்ளதாகவும் இவரின் கைது தொடர்பாக பற்றுச் சீட்டு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவரின் மனைவியினால் யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுளளது. (உ-10-6)

## ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம)

இலங்கை வங்கியின் 62 வருட சேவையினை முன்னிட்டு யாழ். மேற்தரக் கிளையின் நல்லூர் கந்தசுவாமி கோவில் விழாக்கால விசேட கரும பீடத்தின் ஆரம்ப நிகழ்வு 6 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப- 10.00 மணிக்கு இடம் பெறவுள்ளது. (உ)

## கம்பராமாயணம் சொற்பொழிவு

[யாழ்ப்பாணம]

நல்லூர் சைவ மகா சபையினரின் ஏற்பாட்டில் நல்லைக் கந்தன் உற்சவ காலங்களில் நல்லூர் மேற்கு வீதி, முத்துவிநாயகர் ஆலயத்தில் தினமும் மாலை 5.15 மணிக்கு ''கம்பராமாயணம்'' பற்றி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா சொற்பொழிவாற்றி வருகிறார். (செ)

## இன்று ஒரு தகவல்

### முயற்சியே முன்னேறும் வழி

தயிர் சேர்க்கப்பட்ட பாலில் இரண்டு தவளைகள் தவறி விழுந்து விட்டன. பாத்திரத்தை விட்டு வெளியே வருவதற்கு அவைகளுக்கு வழியே தெரியவில்லை முதல் தவளை "இதிலிருந்து நான் எப்படித் தப்பித்துக் கொள்ளப் போகிறேன் செத்தேன்" என்று புலம்பியது. அதன் கால்கள் சக்தி இழந்தன. சற்று நேரத்தில் அது பாலில் மூழ்கிச் செத்தது. இரண்டாவது தவளையோ "இதிலிருந்து நான் எப்படியும் தப்புவேன். கடைசிவரை என் முயற்சியைக் கைவிடமாட்டேன்". என்று நினைத்தது அதனால் அத்தவளை சோர்வில்லாமல் கால்களால் உதைத்துக் கொண்டே இருந்தது.

இப்படியே சிறிது நேரம் இருந்ததால் பால் நன்றாகக் கடையப்பட்ட நிலையை அடைந்தது. வெண்ணெய் திரண்டுமேலே மிதக்கத் தொடங்கிற்று. சற்று நேரத்தில் அந்தத் தவளை மிதந்த வெண்ணெய்யின் மீதேறி நலமாக அமர்ந்தது. பிறகு ஒரே தாவலில் பாத்திரத்தை விட்டு வெளியே குதித்துத் தப்பித்துக் கொண்டது. □

பேராசிரியர் எ. சோதி

# பத்திரிகையாளனுக்கு மொழிஆற்றல் மிக அவசியமான ஒன்றாகும்

## கவிஞர் முருகையன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளன்என்பவன் சிறந்த மொழி ஆற்றல் உள்ளவனாக இருப்பது மிக அவசியம் எவ்வளவு மொழிகள் அவனுக்கு தெரிய முடியுமோ அவ்வளவிற்கு தன்னுடைய துறையில் அவனால் துலங்க முடியும்.

இலக்கிய கலாநிதி கவிஞர் இ முருகையன் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நேற்றுமுன்தினம்இடம்பெற்ற ஊடகவியலில் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கல் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டுஉரையாற்றுகையில் மேற் கண்டவாறு தெரிவித்தார்

யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத் தலைவர் வே. தவச்செல்வன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் மட்டுமல்ல, தென்னிலங்கைப் பத்திரிகைகளில் கூட எழுத்துப் பிழைகள், வசன அமைப்பு தவறுகள் காணப்படுகின்றன. இது நீக்கப்பட வேண்டியது. மிக அவசியம்,

பத்திரிகையாளன் ஒருவனுக்கு நான்யாருக்காக எழுதுகிறேன், வாசகர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பது குறித்த விரிவான பார்வை அவசியம். என்று மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

முதன்மை விருந்தினராக கலந்து சொண்ட யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ சண்முகதாஸ் தனது உரையில்; பத்திரிகையாளன் போற்றுதலிற்கும் தூற்றுதலிற்கும் கடும விமர்சனத்திற்கும் முகம் கொடுக்க வேண்டியவனாகிறான். செய்திகளை தேடுவது மாத்திரமல்ல அச் செய்தியின் பின்னணிகள் குறிதத விடயங்களை மக்கள் பார்வைக்கு வைக்கவேண்டிய பங்கும் அவனுக்கு உண்டு. இம் முயற்சியில் பல கனவான்களின் முகத்திரைகள் கூட கிழிக்கப்படலாம்.

இதனால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து எள்ளளவும் கவலைப்படாத தன்மையை பத்திரிகையாளன் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

'வலம்புரி' பத்திரிகை ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த ந. விஜயசுந்தரம் ஆசிரியர் தனது உரையில்; பத்திரிகைப் பணி என்பதுதற்கொலைக்கு ஒப்பானது அத்தகைய நிலையிலும் பத்திரிகையில் ஈடுபடுவதற்கு முன்வந்துள்ள பயிற்சியாளர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

பத்திரிகையில் எதையும் எழுதலாம், எப்படியும் எழுதலாம் என்ற நிலையில் அல்லாது முதலில் தன்னைப்பாதுகாத்துக் கொண்டு, யதார்த்த நிலையை புரிந்து கொண்டு செய்திகளை எழுதுவது அவசியம்.

தான் சார்ந்த நிறுவனம் சமூகப் போக்கு, போன்றபல் வேறு அம்சங்களையும் கருத்தில் கொண்டே அவனதுபணி அமைய வேண்டும் என்றார்.

நீர்வேலி அத்தியார்இந்துக் கல்லூரி அதிபர் எஸ். விசுவலிங்கம், யாழ். பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் இரா. சிவசந்திரன் உட்பட பிரமுகர்கள் பலர் கருத்துரை வழங்கினர். கலை நிகழ்வுகள் பலவும்இடம் பெற்றன. (க-120)

# கொழும்புத்துறைமுக ஊழியர் வேலைநிறுத்தம்

(கொழும்பு)

கொழும்புத் துறை முகத்தைச் சேர்ந்த 1500ற்கும்அதிகமான ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளதால் துறைமுகத்தில் கொள்கலன்களை ஏற்றி இறக்கும் பிரிவு முற்றாகச் செயலிழந்துள்ளது

கொழும்புத்துறைமுகத்தில் மூன்றாவது கடமை நேரம் அறிமுகப் படுத்தப் பட்டதை அடுத்தே கடந்தபுதன்கிழமை முதல் இந்த வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

துறைமுகத்தில் கொள்கலன்களைக் கையாளும் பிரதான பிரிவான ஜாலா கொள்கலன் தரிப்பிடத்தைச் சேர்ந்த ஊழியர்களின்வேலைநிறுத்தத்தை யடுத்துதுறைமுகவேலைகளை அத்தியாவசிய சேவையாக அரசு ரகடனப் படுத்தி உள்ளது.

இதேவேளை கொழும்பு துறைமுகத்தில் இயங்கும் 15 தொழிற்சங்கங்களில் 14தொழிற்சங்கங்கள் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளன(வ)

## மும்முனைகளில் கிரிக்கெட் போட்டி

# இந்திய அணியிடம் நியூஸிலாந்து அணி தோற்றது

(கொழும்பு

பிறேமதாஸ விளையாட்ட ரங்கில்நடைபெறும் கொக்கோலா வெற்றிக் கிண்ணத்திற்கான மும்முனைச் சுற்று கிரிக்கெட் தொடரில் புதன் இடம்பெற்ற நியூசிலந்து - இந்திய அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில இந்திய அணி நியூசிலாந்து அணியை 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று எதிர்வரும் 5ம் திகதி நடைபெறும் இறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50ஓவர்களில 7விக்கெட்இழப்பிறகு 264 ஓட்டங்களைப் பெற்றது. பதில் துடுப்பாட்டத்திற்கு களமிறங்கிய இந்திய அணி 45 4 ஓவர்களில் 3விக்கெட் இழப்பிற்கு 267 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைச் சுலபமாகப் பெற்றுக்கொண்டது.

எதிர்வரும் 5ம் திகதி நடைபெறும் இறுதியாட்டத்தில் இந்திய அணி இலங்கையணியுடன் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

# இந்திய வீரர் கங்குலிக்கு மீண்டும் தண்டம் விதிப்பு

(கொழும்பு)

கொக்ககோலா முத்தரப்பு கிரிக்கெற் போட்டிகளில் ஒழுக்காற்று நடவடிக்கையின் கீழ் இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி மீண்டுமொரு தடவை தண்டனை பெறவுள்ளார்.

இலங்கை அணிக்கும் இந்திய அணிக்கும் இடையில் கடந்த 1ம் திகதி நடைபெற்ற கிரிக்கெற் போட்டியின் போது இலங்கை அணி வீரர் ரசல் ஆனொல்டை எல்.பி.டபிள்யு முறையில்ஆட்டமிழக்கசெய்த பின் கங்குலி அவரைநோக்கி கூக்குரலிட்டு கேலி செய்தாராம், இவ்விடயம் தொடர்பாக இச்சுற்றுப்போட்டியில் கங்குலிக்குக் கிடைக்கும் வருமானத்தில் 75 வீதம் தண்டப்பணமாக அறவிடப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் முன்னர் இந்திய-நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டம் ஒன்றில் தனக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பு ஒன்றிற்காக நடுவரை நோக்கி துடுப்பைத் தூக்கிக்காட்டியதால் கங்குலிக்கு அடுத்துவந்த போட்டியொன்றில் விளையாடத்தடை விதிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இதேவேளை இலங்கை நடுவர்களால் கங்குலிக்கு வழங்கப்பட்ட இந்தத்தடை விதிப்பானது பாரபட்சமானது என்ற சர்ச்சைகள் தோன்றியுள்ளன கடந்தஆண்டு இலங்கையில நடைபெற்றஇலங்கை இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியொன்றில் நடுவர் வழங்கிய தீர்ப்பை சகிக்கமுடியாத இலங்கையணித்தலைவர்சனத்ஜெயசூரிய தனது தலைக்கவசத்தை கழற்றி வீசினார், இந்தச்சம்பவத்திற்காக" ஒத்திவைக்கப்பட்ட தடை"என்ற பெயரளவிலான தண்டனையே அவருக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-8)

## க.பொ.த(உயர்)தர பரீட்சை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

இன்று ஆரம்பமாகும் க.பொ.த உயர் தரப் பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் 1554பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்கு 2 இலட்சத்து 2 ஆயிரத்து 527 பரீட்சார்த்திகள் தோற்றுகின்னர். (ந-5)

## வாக்குச்சீட்டு விசேடதாளில்

(கொழும்பு)

இம்மாதம் 21ம் திகதி நடைபெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பிற்கென விசேடவகை காகிதாதிகளைப் பயன்படுத்தி வாக்குச் சீட்டுகள் தயாரிக்கப்படுவதாக அரசாங்க அச்சக அதிபர் நெவில நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பு நடவடிக்கைகளில மேற்கொள்ளபபடும் மோசடிகளை தவிர்க்கவே மேற்படி ஏற்பாடுகள செய்யபபட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவிததுள்ளார். (ந-5)

## தமிழ் இளைஞர்கள் 10 பேர் கைது

(திருமலை)

திருமலையில இருந்து மாத்தறைக்கு வான் ஒன்றில் பிரயாணம்செய்த 10 தமிழ் இளைஞர்களை சிகிரியா பொலிஸார் சென்ற புதன் கைதுசெய்துள்ளனர். இவர்கள மீது தொடர்நதும் விசாரணை மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. (வ)

## சமாதானக்குழு மடுவிற்கு பயணம்

(வவுனியா)

சமாதானத்திற்கும் நீதிக்குமான அமைப்பைச் சேர்ந்த 320 பேர் அடங்கிய தூதுக் குழுவினர் சமாதானப் பயணமொன்றை மேற்கொண்டு மடுவைசென்றடைந்துள்ளனர்

இத்தூதுக்குழு அருட்தந்தை பசில விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் பிரமணாலங்குளம சோதனைச்சாவடியூடாக மடுவிற்கு சென்றனர் [ந-5]

## முதியவரின் எலும்புக் கூடு மீட்பு

[தென்மராட்சி]

கடந்தவருடம் தென்மராட்சியில் ஏற்பட்ட இடம் பெயர்வின்போது மட்டுவில் பகுதியில் தங்கியிருந்த வயோதிபர்ஒருவர்எலும்புக்கூடாக மீட்கப்பட்டுள்ளார்.

வல்லிபுரம் வேலுப்பிள்ளை [வயது 95] என்பவரே எலும்புக்கூடாக மீட்கப்பட்டவர் ஆவார். இதுபற்றி உறவினர்களால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது [வ]

## கலட்டியில் மூவர் கைது

(யாழ்ப்பாணம)

யாழ் கலட்டிப் பகுதியில் புதன் மாலை 6 30 மணியளவில் மூன்றுபேர் இராணுவத்தினரால் கைதுசெய்யபபட்டுள்ளனர். சந்தேகத்திற்கிடமாகநடமாடிய மூன்றுபேரை வழிமறித்தபோது அவர்கள் தப்பியோட முற்பட்டனர்.

இதனையடுதது படையினர் ஆகாயபநோக்கி வேட்டுக்களைத் தீரததுமூவரையும் கைதுசெய்து இராணுவமுகாமிற்கு கொண்டுசென்றுள்ளனர். (ந-5)

# சுருக்கெழுத்தாளர் முழு நாள் கருத்தரங்கு இரு தினங்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப் பாணப் பிராந்திய ஆணையாளர் அலுவலகமும், வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகமும் இணைந்து நடத்தும அரச அலுவலகங்களில் பணி புரியும சுருக்கெழுததாளர் தட்டெழுததாளர் முழு நாள கருத்தரங்கு இரு தினங்கள் இடம பெறவுள்ளது. வலிகாமப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு இன்று யாழ்ப்பாணம நாவலர் கலாசார மண்டபத்திலும், வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு நாளை ஞாயிற்றுக் கிழமை கரவெட்டி பிரதேச செயலக மண்டபத்திலும் கருத்தரங்கு நடை பெறவுள்ளது.

இவற்றில் பங்கு கொள்ள 156 பேர் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (உ)

## விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த

# காலாவதியான உணவு பொருட்கள் அழிப்பு

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவுப் பகுதிவர்த்தக நிலையங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த காலாவதியான உணவுப் பொருட்கள் அப்பகுதி சுகாதாரப் பரிசோதகரினால் கைப்பற்றி அழிக்கப்பட்டன.

பிஸ்கட் வகைகள், பால்மாபைக்கற்றுகள் என்பன இவ்வாறு அழிக்கப்பட்டவற்றில் அடங்கும் என சம்பந்தப் பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். கே. அருந்தவராஜா தெரிவித்தார். (உ-75)

# ஆரம்பக்கல்வி ஆசிரியர் செயல்நூல்ஆக்கப்போட்டி

(மந்திகை)

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான செயல் நூல் ஆக்கபபோட்டிக்கான நூல்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு வலய கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

ஆரம்ப வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களிடையே கற்றலில் ஆர்வத்தை தூண்டுவதோடு, அவர்களை ஆக்கபூர்வமாகச் சிந்திக்கத் தூண்டும் நூல்களை உருவாக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது.

இச் செயல் நூல் ஆக்கப் போட்டி, வலய மாகாண மட்டங்களில் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆரம்ப கல்வி ஆசிரியர்களால் ஆக்கப்படும் செயல் நூல்களை நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில் இயங்கும் வலய பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் அறிவித்துள்ளார்.

(உ-23)

# மத்திய அரசின் முடிவு ஏற்கக் கூடியதல்ல

## மாநில அரசு திட்டவட்டமாக அறிவிப்பு

(சென்னை)

தமிழகப் பொலிஸ் உயர் அதிகாரிகள் மூவரையும் மத்திய அரசு பணிக்கு அனுப்ப முடியாதென்று மாநில அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இத்தகவலை தமிழக உள்துறைச் செயலர் தனேஷ் குப்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மத்திய அரசினது இடமாற்ற உத்தரவு சட்டவிதிகளுக்கு மாறானது என்றும்,

இதே வேளை மூன்று பொலிஸ் உயர் அதிகாரிகளும் மத்திய அரசிற்கு இடமாற்றம் செய்யப்பட்டமை உள்நோக்கம் கொண்டதாக அமைந்தது என்றும் தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறி வருவது தெரிந்ததே (த)

# 5 ஆண்டுகளில் 10மடங்கு மின்வர்த்தகம் அதிகரிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் மின் வர்த்தகம் இன்னும் 5 ஆண்டுகளின் ஒருமடங்கு வளர்ச்சியடைந்து விடுமென்று மின்னியல் ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

சென்ற ஆண்டு 4 மில்லியன் டொலராக இருந்த மின்னியல் வர்த்தகம் வரும் 5 ஆண்டுகளில் 41 மில்லியன் வர்த்தகமாக மாறி விடுமென்றும் 1000 மில்லியன் மக்களைக் கொண்ட பெரிய நாடான இந்தியாவில் மோட்டார் கார் உற்பத்தியிலும் அதீத வளர்ச்சியை அடையுமென்றும் எதிர்பார்க்கப் படுகிறது. [த]

# 349 கிலோகிராம் போதைப் பொருள் மீட்பு

[இஸ்லாமபாத்]

ஐரோப்பாவிற்குள் சட்ட விரோதமாக கடத்திச் செல்லப்படவிருந்த 349 கிலோகிராம் ஹெரோயின் போதைப் பொருளை மலுகுஸ்கான் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்

பாகிஸ்தானின் மேற்குப் பிரதேசமான மலுகுஸ்கானில் இருந்து ஆப்கானிஸ்தான் ஊடாக இந்த ஹெரோயினை ஐரோப்பாவிற்கு கடத்திச் செல்ல முற்படுகையிலேயே கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். [உ-7]

# சினிமாவில் பாடுவதில்லை சுசீலா அதிரடி அறிவிப்பு

## ரசிகர்கள் ஏமாற்றம்

(சென்னை)

சினிமாப் பாடல்களை இனிமேல் பாடுவதில்லை என்று தென்னிந்தியத் திரைப் படப் பாடகி பி. சுசீலா அறிவித்துள்ளார்.

சுசீலாவின் 50 ஆண்டுகால கலைச் சேவையைப்பாராட்டி மீனம்பாக்கம் விமான நிலைய மைதானத்தில் எடுக்கப்பட்ட ''நெஞ்சம் மறப்பதில்லை'' என்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

சுசீலாவின் இந்த அறிவிப்பைக் கேட்டு அங்குகூடி இருந்த அவரது ரசிக உள்ளங்கள் அதிர்ச்சி அடைந்தன; (உ)

# லண்டனில் கார் குண்டு வெடிப்பில்; இருவர்பலி

(லண்டன்)

லண்டனின் மேற்குப் பகுதியில் கார் குண்டு ஒன்று வெடித்ததில் 2 பேர் பலியானதுடன், மூவர் படுகாயமடைந்துள்ளனர்;

நேற்றுக் காலை 6 மணியளவில் லண்டனின் பிரதான மதுபானசாலை ஒன்றின் முன் நிறுத்தப்படிருந்த காரில் வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்ததாகக் கூறப்படு தெரிவிக்கிறது.

இச்சம்பவத்தில் வியாபார நிலையம் ஒன்று முற்றாக சேதமடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை இப்பகுதியில் மேலும் ஒரு குண்டு வெடிக்கும் அபாயம் உள்ளதாக பொலிஸார் எச்சரித்துள்ளனர். [உ-7]

# வியக்க வைக்கும் விந்தை நிகழ்வு

★ இறந்தோர் சங்கம்

கண்டதற்கெல்லாம் சங்கமமைத்துப் பழகிப் போனவர்கள் நாங்கள். ஆனால் செத்தவர்கள் எல்லாம் சேர்ந்து இந்தியா, உத்தரப் பிரதேசத்தில் ஒரு சங்கமமைத்துள்ளார்கள் என்றால் தலை கிறுகிறுக்கிறதா?

ஆம்! இச் சங்கத்தில் அங்கத்தவர்களாக இருக்கும் அனைவரும் அரசாங்க ஆவணங்களின் படி இறந்தவர்களே தவிர மற்றும் படி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் தான்.

அங்கே சிலபேர் உறவினர்களின் சொத்துக்கு ஆசைப் பட்டு அவர்கள் இறந்து விட்டதாக பிறப்பு, இறப்பு ஆவணங்களில் பதிவு செய்து விடுகிறார்களாம். இந்த 'இறந்தவர்கள்' தமது உரிமைகளை மீட்க தற்போது சங்கம் அமைத்துள்ளார்கள்.

இவர்கள் இறந்து விட்டதாக ஆவணங்களில் பதியப் பட்டதால் இவர்களுக்கு வாக்குரிமை கூட இல்லையாம் இதென்ன அதிசயம் எம் ஊரில் நிஜமாக இறந்தவர்களே வாக்குப் போடுகிறார்கள் என்று எண்ணுகிறீர்களா? அது பற்றி 'ஒன்றுமே' தெரியாதுங்கோ.

அவதானி

## படையினர் வசமிருந்த

# பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலைப் பகுதி மீள ஒப்படைப்பு

(புலோலி)

இராணுவத்தினரின் பாவனையில் இருந்து வந்த பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் ஒரு பகுதி மீண்டும் பாடசாலை நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இதன் பிரகாரம் கடற்கரையில் இருந்து '50 மீற்றருக்கு அப்பால் மீதிப் பகுதியை பாவிப்பதற்கான அனுமதியை வடமராட்சி சிவில் நிர்வாக இணைப்பதிகாரியும் கட்டளை அதிகாரியுமான கேணல் தல்காகொட வழங்கியுள்ளார்.

பாடசாலைப் பாவனைக்கென அனுமதிக்கப்பட்ட பகுதிகளை அண்மையில் வடமராட்சி வலயப் பணிப்பாளர் மற்றும் பாடசாலை அதிபர், பாடசாலை நிர்வாகசபையினர் அடங்கிய குழுவினருடன் சென்று கேணல் தல்காகொட பார்வையிட்டதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி அனுமதியையடுத்து பாடசாலை எல்லைகளை வரையறுக்கும் பணியும், மிதிவெடிகளை அகற்றும் பணியும் முன்னெடுக்கப் பட்டு வருகிறது. [உ-52]

# 6 ஆம் திகதி சமுகம்தரவும்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிலும் 2 ஆம் வருட மாணவர்கள் சகலரையும் எதிர் வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை கல்வியியற் கல்லூரியில் ஒன்று கூடுமாறு பீடாதிபதி அறிவித்துள்ளார். (உ-7)

# வாழ்த்துப் பத்திரம்

## அனுப்பி வைப்பு

[யாழ்ப்பாணம்]

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய பரம்பரை வழிக் குருவும், சுதுமலை அம்பாள் ஆலய பிரதம குருவுமான சிவஸ்ரீ சபபுகேஸ்வர மகேஸ்வரக் குருக்கள் சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தினரால் சர்வதேச இந்துமதக் குருபீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதையடுத்து இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் அதன் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் வாழ்த்துப் பத்திரம் ஒன்றை அவருக்கு அனுப்பி வைத்துள்ளார். (உ)

# புலிகள் மீது தாக்குதல்

[கொழும்பு]

வவுனியா மேற்கு முன்பள்ளிக்குளம் பகுதியில் விடுதலைப் புலிகள் குழுவினர் மீது படையினர் தாக்குதல் மேற்கொண்டதாக விசேட தகவல் மையம் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் திருப்பித் தாக்கியதில் படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப் பட்டதாகவும் சிலர் காயமடைந்தனர் எனவும் அக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க]

---

## உடலையும்

தேர்வு நன்றாக எழுதியவனுக்கு முடிவைப் பற்றிக் கவலையில்லை. தன்னல மற்ற சேவை செய்த தொண்டனுக்கும் முடிவைப் பற்றிக் கவலையில்லை. ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொருவரும் ஓர் ஏழைக்கு உணவளித்தால் பட்டினிச் சாவைத் தவிர்க்கலாம். கோட்டை கட்டியவனை விடக் குளம் வெட்டியவன் உயர்ந்தவன். கோட்டை ஒருவனுக்குத் தான். குளம் அனைவருக்கும் உதவும் வீட்டிலுள்ள பெரியவர்களுக்குச் சேவை செய்த பின்பு நாட்டிற்குச் சேவை செய்யுங்கள். பிறர் நமக்கு என்ன செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறோமோ, அதை நாமும் அவருக்குச் செய்ய வேண்டும் பல்லக்கில் அமர்ந்திருப்பவனைவிட சுமப்பவன் வலியவன். தலைவனை விடத் தொண்டனே சிறந்தவன். □

# இலக்கியப் பணிக்கு அமைச்சர் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டத்தின் செயற்பாடுகளுக்கென 8 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்ய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இணக்கம் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிதி மூலம் சுதந்திரன் சிறுகதைகள் தொகுப்பு நூல் வெளியீடு மற்றும் வடமாகாண எழுத்தாளர்களின் நூல்கள் கொள்வனவு என்பன இடம்பெறவுள்ளதாக இலக்கிய வட்டத்தலைவர் செங்கை ஆழியான் தெரிவித்தார். (உ)

# பரு.கடலில் மீன் பிடிக்க விதிக்கப்பட்ட தடையை நீக்க கோரிக்கை

(புலோலி)

பருத்தித்துறைக் கடலில் மீன்பிடிப்பதற்கு படையினரால் கடந்த சில தினங்களாக விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாட்டை தளர்த்தி வழமை போல் மீனவர்கள் தத்தம் துறைகள் ஊடாக மீன்பிடிக்க அனுமதிவழங்கப் பட வேண்டும் என பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் 524 வது படைப் பிரிவின் தலைமைப் பீடத்தைக் கோரியுள்ளார்.

அண்மையில் கடலில் இடம்பெற்ற கடற்படையினர் மீனவர் படகுகள் மோதலை அடுத்து முன்பு போல் இன்பருட்டியில இருந்து மீன்பிடிக்கச் செல்லக் கூடாது எனவும் சக்கோட்டை, பொலிகண்டி இராணுவ முகாம் பகுதிகளூடாகவே மீன்பிடிக்கச் செல்ல வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

இந்த உத்தரவினால் மீனவர்கள் எதிர் நோக்கி வரும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாகவே பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் ஐ ஸ்ரீரங்கேஸ்வரன் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார். [உ-52]

## நிவாரண பணிகளில்

# சமுர்த்தி அலுவலரும் இனிமேல் ஈடுபடுவர்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் பொது மக்களுக்கான நிவாரணப் பணிகளில் இனிவரும் காலங்களில் சமுர்த்தி உத்தியோகத்தர்களும் பங்கெடுப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளன இதுதொடர்பாக அரச அதிபர் பிரதேச செயலர்கள், கிராம சேவகர்கள் ஆகியோருடன் கலந்துரையாடி முடிவெடுக்கப் படும்.

இவ்வாறு வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்புமற்றும் வடக்குகிழக்கு தமிழ் விவகார அமைச்சர் கே என். டக்ளஸ் தேவானந்தா நேற்றைய தினம் அமைச்சு அலுவலகத்தில் சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுடனான நடைபெற்ற கலந்துரையாடலில தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி சமுதாயநலன் பேணும் விடயங்கள், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சிறுவர்களுக்கான சத்துணவுத் திட்டம் அனைத்தும்துஷ்பிரயோகமின்றி சிறந்தமுறையில் பொது மக்களை சென்றடைகின்றதா என்பதை கண்காணிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

மேற்படி கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் கே.வி குகேந்திரன் (ஜெகன்) பிரதேசசபைகளின் தலைவர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-15)

# புலிகள் தரப்பில் இருவர் மரணம்

(வவுனியா)

நேற்று முன்தினம் முள்ளிகுளம் பகுதியில் பதுங்கியிருந்த படையினருடன் ஏற்பட்ட மோதலில.

★ துணைப்படை வீரரான வீரவேங்கை - பூங்கண்ணன் [இராசறாஎ, பூங்கண்ணன் திருமலை மாவட்டம்] என்ற பேராளியும,

நாகர் கோவில் பகுதியில் ஏற்பட்ட தவறுதலான வெடி விபத்தில்,

★ வீரவேங்கை அழகுறேயன் (சின்னத்துரை நேசராஜா அம்பாறை மாவட்டம்) என்ற போராளியும் உயிரிழந்ததாக புலிகளின் குரல் வானொலி அறிவித்தது; (உ-4)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அரியாலையூர் சி, சிவதாசன் எழுதிய ''இசை நாடகக் கவிக்குயில் சந்திரமதி வி கே ரத்தினம்'' நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மு. ப 10 00 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் சங்கானை பிரதேச செயலர் க குணராசா தலைமையில் இடம் பெறவுள்ளது.

(2ம் பக்கம் பார்க்க)

மனநலத்தின் ஆகும் மறுமை:மற்றஃதும் இனநலத்தின் ஏமாப்(பு) உடைத்து.

குறள்

# வலம்புரி

## பாதுகாவலன் பணி ஓங்குக

கத்தோலிக்கசமய ஏடான 'பாதுகாவலன்' இன்று 125வது ஆண்டை நிறைவு படுத்தியுள்ளது கடந்த 125 ஆண்டுகளாக இடையறாது ஓர் இதழ் வெளிவருகிறதெனில் அதற்கு இறை ஆசியே காரணமெனலாம். 'உன்னைப்போல் பிறரையும் நேசி' என்ற யேசு பிரானின் உயர்ந்த போதனைகளை வெளிப்படுத்தியுள்ளது.

'யேசுபிரானே' எனச் சைவ சமயத்தவரும் 'முருகா' எனக் கத்தோலிக்க சமயத்தவரும் உச்சரிக்கும், உயரிய பண்பு இன்னமும் கிராமங்களில் இருக்கவே செய்கிறதெனில், சைவமும், கத்தோலிக்கமும் சமயபேதமின்றி பிறசமயங்களையும், பிற சமூகங்களையும் மதிக்கும் உன்னத நோக்கைகொண்டிருப்பதை உணரமுடிகிறது இதற்கு ஒருவழியில் 125 வருடங்களாக இம் மண்ணில் வலம் வந்து ஆத்மீக பணிபுரியும் பாதுகாவலன் பத்திரிகையும் காரணமெனில் அது மிகையன்று. பிறசமயங்களைக் குறை கூறும், பிற சமயங்களைக் கேலி செய்யும் மதப் பத்திரிகைகள் வெளிவரும் இக்காலகட்டத்தில் 125 வருடங்களாக எந்தச் சமயங்களையும் குறைகூறாமல் பிற சமயத்தவர்களின் மனங்களை நோகடிக்காமல் சமய சமூகக் கருத்துக்களை வெளிப்படுத்துவதில், பாதுகாவலன் தனக்கு நிகர் தானே என்பதை உறுதிப்படுத்தி விட்டான். பாதுகாவலன் பத்திரிகை 125 ஆண்டுகளை எய்திவிட்டதெனில் அதற்குப் பின்னால் இருக்கும் தியாகங்களையும், அர்ப்பணிப்புகளையும் நாம் மறந்துவிடமுடியாது அவர்களால் பலர் இன்று இம் மண்ணில் இல்லாவிட்டாலும், தேகாந்த நிலையில் அவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள், பாராட்டப்பட வேண்டியவர்கள்.

அதேவேளை 125 ஆண்டுகளைப் பாதுகாவலன் நிறைவு செய்யும் போது வணக்கத்திற்குரிய ரூபன மரியாம்பிள்ளை அடிகளாரை பாதுகாவலன் தனது ஆசிரியராக கொண்டிருப்பது, அப்பத்திரிகைக் கிடைத்த பெரும் பேறெனலாம்.

பத்திரிகைத் துறையில் தனக்கென ஓர் தனியிடத்தை வகித்துக் கொண்டிருக்கும் வணக்கத்திற்குரிய ரூபனமரியாம்பிள்ளை அவர்களின் அறிவாற்றலால் பாதுகாவலன் வியாபித்துள்ளான். அதன்பணி மென்மேலும் ஓங்கட்டும்.

# உடலையும், உள்ளத்தையும் செலுத்தி உதவுகிற உன்னத சேவையே ஒருவரை உயர்த்தவல்லது

பிறர்நன்மைக்காக சேவை செய்யும் பக்தனுடைய இதயமே ஆண்டவன் பிரியப்படும் கோயில். துன்பமும், துயரமும் அடைந்து கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவவேண்டும் ஏழைகளுக்கும் முன்னேற வசதியில்லாதவர்களுக்கும் உதவ வேண்டும். உடலையும் உள்ளத்தையும் செலுத்தி எல்லாவிதத்திலும் உதவினால்தான் ஒருவன் பக்தனாவான். தேசம் என்பது சமுதாயம். சமுதாயத்திலுள்ள தொடர்புகளும், உறவுமே பக்தியாகும் தேசபக்தி என்ற சொல் இன்று பொருள் திரிபுபட்டு, பூகோளபக்தியாகிவிட்டது நாளை என்பது நம் கையில் இல்லை நல்லவற்றை நினைத்தால் அக்கணமே அவைகளைச் செய்யத் தொடங்க வேண்டும். நன்றி மறந்த கயவரையும், சான்றோர் மன்னிப்பார்கள்.

### சேவையே பூசை

'தேன் என்று சொன்னால் சுவைக்காது உண்ணவேண்டும்: சேவை என்று சொன்னால் போதாது செய்யவேண்டும். மனித சேவையே, மாதவசேவை என்னும் மந்திரத்தை மறவாது நடந்தால் மகாதேவனே மகிழ்வான். சமுதாய தர்மம் என்னும் மரத்தை வளர்த்தே தனிமனித சுதந்திரம் என்னும் கனியை அடையவேண்டும். மாதா, பிதாவுக்குச் செய்யும் சேவையே ஈசனுக்குச் செய்யும் பூசை உன்னைப் பற்றி நீ எவ்வளவு உயர்வாகக் கருதுகிறாயோ, அவ்வாறே சேவையினால் பிறரும் உன்னைப் பற்றிக் கருதச் செய்வாயாக. தேன் ஓர் இடத்தில் கொட்டினாலும் உடலெங்கும் வலிதரும். நாம பிறருக்கு ஒரு தீமை செய்தாலும், அது அவர்களுக்குப் பல துன்பங்களை உண்டாக்கும் உன் கடமையைச் சரியாகச் செய். பலனுக்காகக் கையேந்ததே; அதுவே பெரிய வேள்வியாகும்.

### மற்றவரை மகிழ்வித்தல்

அடுத்தவரை மகிழ்விப்பது அறம் அதற்காக நாம பணம் தேடி ஓடவேண்டியதில்லை. நல்ல சொற்களே போதுமானவை, மற்றவர்களின் குற்றங்களைக் காணும் போது குருடாகவும், குற்றங்களைக் கேட்கும் போது செவிடாகவும் இருக்கவேண்டும். மூங்கில் இனிய புல்லாங்குழலைத் தருகிறது. கரிவிலை உயர்ந்த வைரத்தைத் தருகிறது. சிப்பி முத்தைத் தருகிறது உயர்ந்த பிறவி எடுத்த நாம் உலகிற்காக எதனைத் தருகிறோம். பிறர் தவறு செய்யும் போது மட்டும் நமது கண்கள் பூதக் கண்ணாடி அணிந்து கொள்கின்றன. வாய் ஒலிபெருக்கியாய் விடுகிறது. காவி உடுத்துக் காசிக்குச் செல்வதைவிட, ஆவிதுடிக்கும் நோயாளரின் அருகில் சென்று உதவுதல் மேலானது. எல்லா இடத்திற்கும் ஒளிதரும் குத்துவிளக்கு, தனக்கடியில் நிழலோடிருக்கிறது பிறருக்குதவும் பெரியோர் தமக்கென்று எதையும் செய்து கொள்வதில்லை, நற்செயல்களைச் செய்யும்போது நாற்புறங்களிலிருந்தும் எதிர்ப்பு வரும் இனிப்பு உண்ணும் போது காரமும் தேவை தானே.

### பொறுமையே ஜெயம்

காட்டிற்குச் சென்று கடுந்தவம் புரிவதைவிடக் கண்ணற்றவரின் கழிபிடித்து வழிகாட்டுதல் சாலச்சிறந்தது. உண்ணாமல் நோன்பு நோற்பதைவிட, பசியுடனிருக்கும் ஒருவனுக்கு விருந்தளிப்பதே சிறப்பானது தேளையும், பாம்பையும் தேடிக் கொல்வதைவிட, பிறருக்கு நேரும் தீங்குகளை எதிர்த்து நில்லுங்கள் வலிமையென்பது பிறரை அடித்து வெல்வதல்ல; பிறர் நம்மேல் சாற்றும் பழிகளைப் பொறுத்துக் கொள்வதே.

## வசந்தா மணாளன்

நாம் செய்யும் தவறுகளைப் பிறர் சுட்டிக்காட்டினால், அவருக்கு மறவாமல் நன்றி கூறவேண்டும். தன்னலமற்ற தொண்டு, கலப்படமற்ற தங்கத்திற்கு ஒப்பானது. தன்னுடைய செல்வம், அறிவு ஆற்றல் ஆகியவற்றைச் சமுதாயத்திற்குச் செலவழிப்பவன் போற்றத்தக்கவன்; தொண்டு என்பது ஏதோ பெரிய காரியம் என்று எண்ண வேண்டாம். பிறர் துன்பம் கேட்டு, ஆறுதல் கூறுவதும் தொண்டுதான் பொருள் ஒன்றிருந்தால்தான் பிறருக்கு உதவமுடியும் என எண்ண வேண்டாம். உடல் வலிமையினாலும், உள்ளத்திலிருந்து வரும் சொற்களினாலும் கூட உதவலாம்.

பிறருக்கு கொடுக்கும் போது பணிவோடு கொடுக்க வேண்டும். முற்றிய நெற்கதிர் வணங்கி வழங்குகின்றது. கல்லால் தன்னை அடித்தவனுக்கும் இனிய கனிகளை மரம் கொடுக்கிறது. நம்மைச் சொல்லால் அடிப்பவர்களுக்கு கனிவான சொற்களை சொல்லவேண்டும். தனக்கென்று ஒருகனியைக் கூட மரம் நிறுத்தி வைத்துக் கொள்வதில்லை நாம் பிறருக்கென்று ஒருதுரும்பைக் கூட கொடுப்பதில்லை, பலரைத் துன்புறுத்தி ஒருவர் இன்பமடையக்கூடாது. ஆனால் ஒருவர் துன்பமடைந்துபலரை இன்புறச் செய்தல் மேலானது.

### பணியே பயன்

தனக்கு ஒரு உதவியும் செய்யாத வழிப்போக்கர்களுக்கும், ஆடு, மாடுகளுக்கும் நிழல் தந்து மரம் உதவுகிறது நாம் நமக்கு உதவியவர்களைக்கூட மறந்து விடுகிறோம். உலக மக்கள் அனைவரும் உடன் பிறப்புகளே என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்தால், பகையானது சூரிய மண்டலத்திற்கே ஓடிப்போய்விடும் தற்கொலை செய்ய, ஊதுவர்த்தியும், மெழுகுவர்த்தியும் சந்தனக்கட்டையும் பிறருக்கு உதவுவதற்காகத் தம்மையே அழித்துக்கொள்கின்றன. மனிதன் தனக்காகப் பிறரை அழிக்கின்றான் அவ்வப்போது நாம் நினைக்கவேண்டியவை. இறைவனடியும், பிறர்செய்த உதவியும். அடியோடு மறக்க வேண்டியவை நாம் பிறருக்குச் செய்த உதவியும் பிறர் நமக்குச் செய்த தீமையுமே. அடுத்தவர் உங்கள் தவறினைச் சுட்டிக்காட்டி எள்ளி நகையாடினால் இருமடங்கு மகிழ்வோடிருங்கள். அவர் மகிழ உங்கள் தவறுஉதவியது மீண்டும் அந்தத் தவறைச் செய்யாதிருக்க அவர் உதவினார்.

### தன்னலமற்ற சேவை

உடல் நோய்க்குப் பல மருந்துகள் உள. உள்ள நோய்க்குத் தன்னலமற்ற சேவையே மருந்தாகும். ஒருவர் நமக்கு உதவி செய்தால், உடனே அந்தக் கடனைத் தீர்த்துவிடவேண்டும். இல்லையேல் வட்டி கொடுக்கக் கட்டுபடியாகாது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## நூல் அறிமுகம்

# சிவமகாராசாவின் சேவையை நினைவூட்டும் நல்லதொரு சிறப்பு மலர் "கூட்டுறவுத் தீபம்"

கூட்டுறவாளர் சி. சிவமகாராசா ((பாராளுமன்ற உறுப்பினர் யாழ். மாவட்டம்) வின் சேவை நலன் பாராட்டு விழா சிறப்பு மலர், தெல்லிப்பழை ப.நோ. கூ. சங்க விழாச் சபையினரின் வெளியீடு.

"உண்மையான உழைப்பினாலும் உறுதியான சொல் வன்மையாலும் தன்னலங்கருதாத் தியாகச் சிந்தையாலும் மக்கள் மனதில் ஓர் உறுதியான இடத்தைப் பிடித்துக் கொண்டவர் எஸ். சிவமகாராசா தந்தை செல்வாவின் அறவழிப்பாதை இவருக்கு வழிகாட்டியாக அமைந்ததெனலாம். செயல் வீரர் அமரர் அமிர்தலிங்கத்தின் வழிகாட்டல் இவரை இந் நிலைக்கு உயர்த்தி விட்டது எனவும் கூறலாம். தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலே கால் நூற்றாண்டுக்கும் மேலாக கண்ணியமாகக் கடமை புரிந்தவர் இவர்'' என்று கூட்டுறவாளரும், தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பியுமான எஸ். சிவமகாராஜாவின் சேவை நலன் பாராட்டு விழாச்சிறப்பு மலருக்கு அளித்த வாழ்த்துச்செய்தியில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெரிவித்துள்ளார்.

## தினசரி தியானம்

## உண்டி

இறையே, உணவின்றிநான் சிலநாள்வாழமுடியும்; உனது உணர்வின்றிக் கணப்பொழுதும் உயிர்தரியேன்; உடலுக்குத் தரும் உண்டி உள்ளத்தையும் பேணவல்லது உள்ளத்தில் அமைதியுண்டு பண்ணுகிற நல்லுணவையே அருந்துதல் வேண்டும். மிகைபடவோ, குறைபடவோ உண்டியை ஏற்பது பொருந்தாது. அளவுபடஉண்பதுயோகியர்செயல அவரவர்க்குபொருந்துகிற உணவை அவரவரே கண்டு கொள்ள வேண்டும்.

அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை
பிண்டப சுருங்கில் பிராணன் நிலைபெறும்;
உண்டி சுருங்கில் உபாயம் பலவுள
கண்டங் கறுத்த கபாலியுமாமே.

-திருமந்திரம்-

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்.

ஜெயநேசன், அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் உட்பட மற்றும்பல பெரியார்கள் ஆசிச் செய்திகள் வழங்கியுள்ளனர்.

சிவமகாராசாவின் அரும் பெரும் சேவையைப்பல்வேறு பார்வையிலும் இவர்கள்மனந் திறந்து பாராட்டியுள்ளனர்.

## முருகதாஸன் ஸ்ரீ

(உருபபிராய் கிழக்கு)

''கூட்டுறவுத் தீபம்'' என்ற இச்சிறப்புமலரின் வெளியீட்டு விழா அண்மையில் தெல்லிப்பழையில் நடைபெற்றது.

### ஆசிச் செய்திகள்

இம்மலருக்கு திருஞான சம்பந்தர் ஆதீனப் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், மாவை ஸ்ரீ கந்தசாமி கோயில் ஆதீனகர்த்தா மகாராஜ ஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள், பேராயர் அதி, வண.

### அரிய பொக்கிஷம்

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தில் கடந்த கால் நூற்றாண்டாக இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளைத் துலாம்பரமாக, துல்லியமாக வெளிப்படுத்தும் வண்ணப்படங்கள், மற்றும் பல்துறை சார்ந்தஅறிஞர்களின் சிறப்பான ஆக்கங்களையும் உள்ளடக்கியதாக, காலத்தால் அழிந்திடா அரியதோர் பொக்கிஷமாக இம் மலர் அமைந்துள்ளதெனப் பகரின் அது மிகையாகாது.

# படைகளுக்கு வழங்கும் உதவிகளை வெளிநாடுகள் நிறுத்த வேண்டும்

## ரெலோ செல்வம் வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் ஏற்பட வேண்டுமானால் அமெரிக்கா உட்பட இலங்கைக்கு உதவும் முக்கிய நாடுகள் படையினருக்கு வழங்கும் உதவிகளை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இவ்வாறு ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று ரெலோ அமைப்பின் தூதுக்குழு அமெரிக்கத் தூதரக அரசியல் பிரிவு அதிகாரியை சந்தித்து பேச்சு நடத்தியது. அச்சந்திப்பின் போதே செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டுமென்பதற்காக வெளி நாடுகள் படையினருக்கு உதவியையும் பயிற்சியையும் தாராளமாக வழங்கி வருகின்றன இதனாலேயே அரசாங்கம் யுத்தத்தில் முனைப்புக் காட்டி வருகின்றது

இந் நிலையில் அரசுக்கு வெளிநாடுகள் வழங்கும் உதவிகளை நிறுத்தினாலேயே சமாதானம் ஏற்பட முடியும்.

வெளி நாடுகள் இலங்கைக்கான உதவிகளை நிறுத்தும் பட்சத்திலேயே அரசு யுத்தத்தைக் கைவிட்டு சமாதான முயற்சிகளைத் தொடர ஆர்வம் காட்டும் அத்துடன் அமெரிக்கா உட்பட இலங்கைக்கு உதவும் முக்கிய நாடுகள் பலவும் கூட்டாக யுத்தத்தைக் கைவிடுமாறும் படை நடவடிக்கைகளை நிறுத்தி சமாதான முயற்சிகளை தொடருமாறும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமெனச் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்திக் கேட்டுள்ளார். (இ)

### அமைச்சர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழியினரின் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படக் கூடாதென்று குழுவிடம் எடுத்துக்கூறினர்.

இதனைக் கவனத்தில் எடுத்த அமைச்சர்குழு இவ்விடயத்தில் அவசரப்பட்டு முடிவுகள் எதனையும் எடுக்கவேண்டாம் என்றும் கலந்துரையாடி முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிடம் தெரிவித்துள்ளது. (வ

### கொழும்புத்துறை...

பிரேதச வசனை ரதியும், அவரின் உதவியாளரும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### 5 நிபந்தனை...

முன வைத்துள்ள நிபந்தனைக்கு அரசு அளிக்கும் பதிலிலேயே அரசை ஆதரிப்பதா? எதிர்ப்பதா? என்பது முடிவெடுக்கப் படுமென்று தெரிவித்துள்ளார். (வ)

## மாவட்டரீதியில் வாக்குச்சீட்டு

சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பான வாக்குச்சீட்டுகள் ஒவ்வொரு மாவட்டங்களுக்கும தனித்தனி குறியீடுகள் அச்சிடப்பட்டுள்ளதாக அரசாங்க அச்சகக்கூட்டுத்தாபன தலைவர் நெவில் நாணயக்கார தெரிவித்துள்ளார்

வாக்குச்சீட்டில் முறைகேடுகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் முகமாகவே ஒவ்வொரு மாவட்டத்தினதும் வாக்குச்சீட்டில் தனித்தனியான குறியீடுகள் போடப்பட்டுள்ளது (வ)

### இலங்கைக்கான...

இருதரப்பினரையும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறும் கேட்டுள்ளதுடன் அரசியல் தீர்வு ஒன்றுக்கான பாதையில வன்செயலுக்கோ பயங்கரவாதத்திற்கோ இடமில்லை என்றும் இந்தியா தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் பல்வேறு தாக்குதல்களை இந்தியா கண்டித்து வந்துள்ள போதிலும் விமான நிலையம் மீதான தாக்குதல்களை இந்தியா கண்டிக்கவில்லை என்று இந்துப் பத்திரிகை தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

சமாதானத்திற்கான மாற்றீடு எதுவும் இல்லை என்று கூறியதன் மூலம் இலங்கை அரசின் சமாதானத்துக்கான போர் வழிமுறைகளை இனிமேலும் இந்தியா ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதையே அது சுட்டிநிற்கிறது.

அண்மையில் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப பகுதியில் இடமபெற்ற குண்டு வீச்சு நடவடிக்கைகளை இந்தியா கண்டித்திருந்தது இக்குண்டுவீச்சுத் தாக்குதலை இறைமையின் பாதுகாப்பு நடவடிக்கை என்றுகூறிய வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் யதார்த்த நிலைக்குப் பொருந்தாது என்றும் கூறியிருந்தார்.

இந்நிலையில் புதுடில்லி ஏனைய வழிகளில் சமாதானபேச்சை வலியுறுத்தி இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுத்து வருவதாகவும் தெரியவருகிறது.

யுத்தக் கப்பல்கள் மற்றும் இராணுவத் தளபாடங்களை இலங்கைக்கு விற்பதில்லை என்றும் புதுடில்லி தீர்மானித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. [வ]

## ஏ. எல். மாணவர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

க. பொ. த உயர்தரப்பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்து பட்டப்படிப்பைத் தொடர உளப் பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

இவ்வாறு க பொ, த உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்த விடுத்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவ் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

தமிழ் மாணவர்கள் கல்விச் செல்வத்தைப் பெற்று உயர்வடைவதன் மூலம் சமுதாயத்தில் சக்தி மிக்கவர்களாக மிளிர்ந்து எதிர் காலத்தில் நிதானமாக அடியெடுத்து வைத்து இம் மண்ணிற்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

எதிர்காலச் சந்ததிக்கு சிறந்த வழிகாட்டிகளாகவும் நீங்கள் திகழ எனதுமனப்பூர்வமான வாழ்த்துக்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### சடலங்களை...

தளத்தாக்குதல் தொடர்பான விசாரணை நீர்கொழும்பு நீதவான்நீதிமன்றில நடைபெற்றபோதே மேற்கண்டதடைஉத்தரவை நிதவான் பிறப்பித்தார்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாகவிசாரணைகளை நடத்திவரும் இரகசிய பொலிஸ்புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசில்மெண்டிஸ் நீதிமன்றில் சாட்சியங்களை நெறிப்படுத்தினார்.

விமானபபடைத் தளத்தின் மீதான தாக்குதல் சமபவம் நடைபெற்ற24ந்திகதி விமானப்படைத்தள பாதுகாப்பிற்குப் பொறுப்பாக இருந்த பொறுப் பதிகாரியிடமும மற்றும இரு அதிகாரிகளிடமும சட்சியங்களைப் பெற வேண்டியிருப்பதால அவர்களை எதர்வரும 7ந்திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறும நீதவான் உத்தரவிட்டுள்ளார். (வ)

### விமானத்தள...

ளார்,

இக்குழுவில் பொலிஸ்மா அதிபர், முப்படைத்தலைவர்கள் உல்லாசப் பயணத்துறைச் செயலாளர், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரிகள் மற்றும விமான நிலைய உயரதிகாரிகள் அடங்குவர்.

கட்டுநாயக்கா விமானப் படைத்தள தாக்குதலையடுத்து ஸ்ரீலங்கா ஏயர் லைன்ஸ் விமானப போக்குவரத்துக் கமபனி பாரிய நெருக்கடிக்குள்சிக்கியுள்ளது. அததுடன வெளிநாட்டு விமானக் கம்பனிகள் மற்றும் பயண முகவர்கள கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை பயன்படுத்த தயங்குகின்றனர்.

இந்நிலையில்மேற்படிநிலைமைகளை சீராக்கி விமானப் போக்குவரத்தினை மீணடும் பழைய நிலைக்குக்கொண்டு வரவும, அதன பாதுகாபபை எதிர்காலங்களில உறுதி செய்து அதறகுரிய ஆலோசனைகளை வழங்கவுமே இவ் ஆலோசனைககுழு நியமிககப படடுள்ளது. [இ

### பொலிஸ்மா அதிபர்களாக பதவி உயர்வு

சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆறுபேர் பொலிஸ்மா அதிபர்களாக பதவி உயர்த்தப் பட்டுள்ளனர்.

இப் பதவி உயர்வுக்கான உத்தரவை பொலிஸ் தலமையகம்விடுத்துள்ளது. சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்களன கலகமுவ, தர்மரட்ண, சீ எல் ரட்ணாயக்க, டீ. டபிள்யூ பிரதாபசிங்க ஆனந் விஜபக்கர மற்றும டீ. ஏ விதாரண ஆகியோரே பதவி உயர்வு பெற்றவர்களாவர். (இ)

### வன்னியில் 3500 பரீட்சாத்திகள்

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப பரதேசததில் இனறு ஆரமபமாகவுள்ள க. பொ. த. உயர்தரப்பரீட்சைககு 3500 மாணவர்கள தோற்றவுள்ளனர்.

முல்லைத்தீவில் சுமார் 1800மாணவர்களும், கிளிநொச்சியில சுமார் 1500 மாணவர்களும, மடு மற்றும் வவுனியா வடக்கில சுமார் 175 மாணவர்களும இந்தப் பரீட்சைககுத தோற்றவுள்ளதாகத் தெரிவிககப்படுகிறது. (வ

### வடமராட்சியை நோட்டம்விட்ட கிபிர் விமானங்கள்

வடமராட்சி மற்றும தென்மராட்சிபபகுதிகளை நேற்று கிபிர் விமானங்கள் வட்டமிட்டன.

திடீரென வான்பரப்பில் நுழைந்த இந்த விமானங்கள் சுற்றி வட்டமிட்ட போதும் குண்டுவீச்சு எதனையும் நடத்தவில்லை'

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம தாக்கிஅழிககப் பட்டதையடுத்து நேற்று இரண்டாவது தடவையாக கிபிர் விமானங்கள யாழ். குடாநாட்டில வட்டமிட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-10-24

### இளைஞனின்...

10 00 மணியளவில் பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சுமார் 30 வயது மதிக்கத்தக்க மேற்படி இளைஞனின சடலம அடையாளம காணும் பொருட்டும், பிரேத பரிசோதனையின் பொருட்டும் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (உ.104)

பாதுகாவலன் பத்திரிகையின்
125வது ஆண்டு நிறைவு விழாவும்
மலர் வெளியீடும்

பாதுகாவலன் பத்திரிகையின் 125வது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீடும 04-08-2001 இன்று சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ் மறைக்கலை நிலையத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் நூலின் முதற் பிரதியை யாழ் ஆயர் வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் பெற்றுக்கொள்வார், நூல் ஆய்வுரையை தென்னிந்திய திருச்சபை ஆயர் வண. ஜெபநேசன் ஆண்டகை அவர்கள் நிகழ்த்துவர்.

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

நன்றி.

ஆசிரியர்
பாதுகாவலன்.

(2361)

30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த சுகாதார முறைப்படி உணவிற்கு வைத்தியர்களுக்கும் விஷேசமாக தயாரிக்கப்பட்டது,

சுத்தமான
வி.எஸ்.ரி. நல்லெண்ணெய்

தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்

பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1986)

உங்களது நயம், நம்பிக்கை நாணயமுள்ள, தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

நியூ நகுலா ஜுவல்லறி

74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நியூ லலிதாஸ் ஜுவல்லறி
174, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

நகுலா நகைமாடம்
241 G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,

(கி 2195)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.